Registered No. M. 59

ஸத்யம்வத,
தர்மஞ்சர.

தத்வம் எங்குண்டு,
தத்வன் அங்குண்டு.
(திருமந்திரம்.)

பிரம்மஞ்ஞானப் ௐ பத்திரிகை.

வாலம் II. { 1908-ஷு ஜனவரி மீ
பிலவங்கஷு தை மீ } நம்பர். 7.

Printed at the "Sri Vidya Vinodini Press," Tanjore
Edited and Published by A. Ramier at Tiruvalur.

Copy-Right Registered.

வருடசந்தாமிகவும் சொற்பம்! தபாற்கூலியுள்பட ரூ 1-8 தான்.

The Siddanta Deepika or the Light of Truth, Madras.

The only magazine devoted to the study "Siva Siddanta Philosophy

Annual subscription Rs. 4. The journal has a very wide circulation throughout India, Burmah, The Straits, Ceylon and the European Countries.

Wanted active Agents and liberal Commission. Saiva Siddanta Philosophy is the choicest product of the Dravidian Intellect.

ஆத்மபோதினி.

இப்பெயர் புனைந்த ஓர் பத்திரிகைமாதம் நான்குமுறைதிங்கட்கிழமைகள் தோறும் தத்துவஞ்ஞான சம்மந்தமானதும், உலகசமாசாரங்களும் நல்ல தமிழ் நடையில் பிரசுரிக்கப்பட்டுவருகிறது.

வருட சந்தா ரூ 2—8—0
6 மாதத்திற்கு ரூ 1—8—0
பினாங்கு, சிங்கப்பூர் ரூ 3—0—0

வேண்டியவர்கள் ஆத்மஞானபோதினி ஆபீஸ் "யாழ்ப்பாணம்" மானேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கோயம்புத்தூர் கலாநிதி.

மாதம் இருமுறை கோயம்புத்தூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் மத சம்மந்தமான விஷயங்களும் சமாசாரக்குறிப்புகளும் அடங்கியிருக்கும்.

வருட சந்தா	ரூ 2—0—0.
ஆறுமாதத்திற்கு	ரூ 1—0—0.

விற்பனைக்குத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

தத்துவார்த்த மடங்கிய பகவத்கீதை	அணா 4
தென்இந்தியா சரித்திரம்	ரூ 1—12—0.
பலிஜவாரு புராணம் காலிகோ பைண்டு	ரூ 2—8—0.
இந்து விஷயநூல்	ரூ 2—0—0.

(வேண்டியவர்கள்) கலாநிதி பத்திராதிபர் ஸ்ரீமான் S. P. நரசிம்மலு நாயடு அவர்களிடமிருந்து பெற்றுக்கோள்ளலாம்

இந்து சாஸ்திராபிமானி.

என்ற புத்தகமும் சிரேஷ்டமாலிகா, கல்லிடைக்கும்மி யென்ற புஸ்தகங்களும் திருநெல்வேலிஜில்லா கல்லிடைக்குரிச்சி வா. முத்துகிருஷ்ண ஐயரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்துசாஸ்திராபிமானி வெகு நல்ல புத்தகம். விலை அணா 6.

ஓம்:—

ஸ்ரீமத் சங்ராசாரியசுவாமிகள் செய்த
நிர்வாணஷட்கம்.
(மொழிபெயர்ப்பு)

---

1. "நான் மனம் புத்தி அகங்காரம் சித்தங்களல்ல, நான் காது நா மூக்குக்களல்ல, நான் ஆகாயம் பூமி ஒளி வாயுக்கள்ல்ல; அறிவானந்த ரூபியாகிய சிவன் நான், சிவன் நான்.

2. நான் பிராணனல்ல. ஐவகைவாயுக்களல்ல, சப்ததாதுக்களுமல்ல, பஞ்சகோசங்களுமல்ல, வாய், கை, கால், குதங்களல்ல; அறிவானந்த ரூபியாகிய சிவன்நான், சிவன்நான்.

3. எனக்குப்பகை சிநேகங்ளில்லை, எனக்கு லோபம் மோகங்களில்லை, எனக்கு மதமும் பொறுமையுடைமையும் இல்லவேயில்லை, எனக்குத் தருமமில்லை, அருத்தமில்லை, காமமில்லை, மோக்ஷமில்லை, அறிவானந்தரூபியாகிய சிவன் நான், சிவன்நான்.

4. எனக்குப் புண்ணியம் இல்லை' பாபம் இல்லை, சுகமில்லை, துக்கமில்லை, மந்திரமில்லை, தீர்த்தமில்லை; வேதங்களில்லை, யாகங்களில்லை, நான் உணவும் அல்ல, உண்ணப்படுவதுமல்ல, உண்பவனுமல்ல, அறிவானந்தரூபியாகிய சிவன்நான், சிவன்நான்.

5. எனக்கு மரணம் இல்லை, சந்தேகம்இல்லை, சாதிபேதம் இல்லை, எனக்கு பிதா இல்லை, மாதாவும் இல்லை, பிறப்பும் இல்லை, இனமில்லை, சிநேகமில்லை, குரு இல்லை, சிஷ்யன் இல்லை, அறிவானந்தரூபியாகிய சிவன்நான், சிவன்நான்,

6. நான் எங்கும் எல்லாவிந்திரியங்களுக்கும் வியாபகத்தன்மையனுதலினல் வேற்றுமை அற்றவன், ஒரு குறித்தவடிவமற்றவன், எனக்கு அடையப்படாததுமில்லை, பந்தமும்இல்லை, மோட்சமும் இல்லை, ஆகவே ஞானனந்தரூபியாகிய சிவன்நான்' சிவன் நான்''.

ஆசாரிய சுவாமிகளுடைய இந்த வேதோபநிஷத் சாரமான ஸ்தோத்திரங்களை மூன்றுகாலங்களிலும் பாராயணஞ் செய்து வருகிறவர்கள் ஜீவன்முத்தர்களாவார்கள், பெரும்பான்மையாக சுவாமிகளுடைய அபிப்பிராயம் ஒவ்வொரு கர்மங்களும் பற்றின்றியே செய்யப்படுதல் வேண்டுமென்பதும் அவ்வாறு செய்பவர்கள் சகலதத்துவங்களையும் நானல்லவென்று களைந்து நான்யார்? எதற்காகவுற்பவித்தேன்? நான் அடையவேண்டிய இடம் யாது? என்னுமவ்வினுக்களுக்கு விடைகூறுவதுமாகவே காணப்படுகின்றது. ஏனையஸ்தோத்திரங்கள் ஆன்மாவுக்கு அருத்தம் காமம் முதலிய இன்மைபயன்களையே பயப்பனவாகி ஆன்மாவை மீட்டும் மீட்டும் பிறந்து இறந்து உழன்று வண்டிச்சக்கரம்போல் அலையச்செய்கின்றன. ஆதலால் ஆத்மஞானத்தைப்பெற விரும்புவோர் நான்காம்புருஷோத்தமராகிய சங்ராச்சாரிய சுவாமிகளுடைய அத்வைத பரமான மேற்கூறப்பட்ட நிர்வாணஷட்கம் சிவானந்த லகரி முதலியபாடல்களையும் அவற்றின் பொருள்களையும் செவ்வேயுணர்ந்து சச்சிதானந்த நித்திய பரிபூரண நிரதிசய நிர்க்குணப்பிரம்மாகியபரமசிவத்தோடு அபேதமான சாயுச்சிய பதம் பெறக்கடவர். (ஆ—னி)

ஸ்ரீமத். ஹரதத்தாசாரியசுவாமிகள்

அருளிச்செய்த

சிவோத்கர்ஷ தசசுலோகி.

(சிவபெருமானதுயர்ச்சியைக்கூறும்பத்துச்செய்யுள்)

(மொழிபெயர்ப்பு.)

1. உமாசமேதராகிய பரமேசுவரன் எங்களுடைய குலதெய்வம், ஆன்மநாயகரே! உமையை யுடையவரே! நாங்கள்

நும்மவர்கள். அம்மையோடு கூடிய தேவரீரைத்துதிக்கின்றேன். தேவர் அசுரர், உரகர்கள் உமேசராகிய நும்மாலே மறைக்கப்பட்டார்கள். உமாபதிக்கு என்னால் செய்யப்படும் வணக்கம் ஆகட்டும். அம்பிகாபதியினின்றும் மேலாக ஒருவரை வணங்கமாட்டேன். நான் அன்னவருக்கு அனுசரனாக விருக்கிறேன். என்னுடைய இச்சை அம்மையோடுகூடிய பரப்பிரமத்தினிடத்திலிருக்கின்றது.

2. விஷ்ணுமுதலிய தேவர்கள் தாங்கள் முப்புரத்தவரை ஒருத்தற்கு வலிமையற்றவர்களாய், எந்தச்சம்புவை அடைந்து பகவானே! நாங்களே பசுக்கள், எங்களுக்கு நீரே ஈசுவரன் என்று வணங்கித் தங்கள் தங்கள் பதவிகளை நிலைபெறுகப் பெற்றுக்கொண்டார்களோ அந்தப்பரப்பிரம்மத்தினிடத்தில் என் மனம் சுகமாக விளையாடட்டும்.

3. எவருக்கு திரிபுர தகனஞ் செய்யப்புறப்பட்ட சமயத்தில், பூமி தேராகவும், சந்திர சூரியர் அதற்கு நேமிகளாகவும்! வேதங்கள் குதிரைகளாகவும், பிரமன் சாரதியாகவும் மகாமேரு வில்லாகவும், ஆதிசேஷன் நாணாகவும், விஷ்ணு அம்பாகவும், சமுத்திரம் தூணியாகவும் இருந்தனவோ அந்தப்பரமாத்மாவினிடத்தில் என்மனம் சுகமாக விளையாடட்டும்.

4. எவரால் சுடலைச்சாம்பல் சிறந்த பரிமள கந்தங்களுக்கொப்பாகத் தமது சகுணத்திரு மேனியிலணியப்பட்டதோ! எவரால் கமலோற்பவராகிய பிரமதேவருடைய தலை பொற்பாத்திரங்களுக்கொப்பக் கொள்ளப்பட்டதோ! எவரால் விஷ்ணுமூர்த்தியினுடைய கண் பூசைக்குரிய தாமரை மலர்களோடொப்பாக வங்கீகரிக்கப்பட்டதோ! அந்தச்சுணப்பிரம்மத்தினிடத்தில் என்மனம் சுகமாக விளையாடட்டும்.

5. ஒருகாலத்தில் வியாசமகரிஷியானவர் காசி விசுவநாத சுவாமி சன்னிதியில் முனீசுவரர்கள் முன்பாகத்தமது கையிரண்டையும் உயரத்தூக்கி, விஷ்ணுமூர்த்திக்கு மேலான ஒரு தெய்வமுமில்லையென்று சொல்லி, சிவகணத்தலைவராகிய திருநந்திதே

வரால் எக்காரணத்தினால் நீட்டியனகைகள் இவ்வாறு தம்பிக்கப் பட்டனவோ அக்காரணத்தினராகிய சகுணப்பிரமத்தினிடத்தில் என்மனம் சுகமாக விளையாடட்டும்

6. எவரால் ஆகாயம் அசைவப்படுகின்றதோ! எவரால் பத்துதிக்குகளும் நிறைந்து சூழ்விக்கப்பட்டிருக்கின்றதோ! எவரால் சந்திரன் உதிப்பிக்கப்படுகின்றதோ? எவருக்கு அழியா இன்பம் சுவரூபமாக இருக்கின்றதோ! எவரால் வேதாந்தம் நிலைக்கப்பட்டதோ! எவருக்குச்சர்வாதாரம் சுவபாவமாயுள்ளதோ! அந்தச்சாம்பசகுண பரமேசுவரனிடத்தில் என் மனம் சுகமாக விளையாடட்டும்.

7. விஷ்ணுமூர்த்தி நியமமாக ஆயிர நாமங்களினால் தாமரை மலர்கொண்டு எவருடைய இருமலரடிகளை அருச்சித்து குறைவுற்றவொன்றுஞ்சாகத் தன் கண் மலரை எடுத்துப் பூசித்து அசுரக்கூட்டத்தை ஒழித்து எவரால் மூவுலகங்களுக்கும் இரக்ஷகரானாரோ! அந்தச்சாம்ப சகுணப் பிரமத்தினிடத்தில் என் மனம் சுகமாக விளையாடட்டும்.

8. விசுவரூபத்தினுடையஅடியைத் தேடிக்காணுதலில் பன்றிரூபமெடுத்தவரும், உண்மைபேசுபவரும் ஆகிய மகாவிஷ்ணுவை, எவர் அன்போடு சகலவுலகங்களுக்கும் நாயகராகச் செய்தனரோ! முடியைத் தேடிக்காணுதலில் அன்னரூபமெடுத்தவரும், பொய்சொன்னவரும் ஆகிய பிரம்மதேவரை யாவராலும் எப்போதும் பூசிக்காதவாறு எவர் செய்தனரோ! அந்தச்சாம்ப சகுணபிரம்மத்தினிடத்தில் என் மனம் சுகமாக விளையாடட்டும்.

9. எவருக்குப் பூமி ஜலம் அக்கினி வாயு ஆகாசம் சூரியன் சந்திரன் கருத்தன் என்பவைகள் அஷ்ட மூர்த்தங்களாகப் பரிணமித்தனவோ! எவருக்குமேலாக வேறொன்றில்லையோ! ஓங்காரப்பொருளை அறிவிக்கின்ற சுருதியும் எந்தச் சிவத்தைத் துரியமூர்த்தியாகச் சொல்லுகின்றதோ! அந்தச்சாம்ப சகுண பரமாத்மாவினிடத்தில் என் மனம் சுகமாக விளையாடட்டும்.

10. விஷ்ணு பிரமா இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களும், அசுரர்களும் சமுத்திரத்திலிருந்துண்டான விஷத்தினால்

வருந்தி எந்த ஈசுவரனை அடைந்தனரோ! எவர் துன்பத்தோடு புகலிடமடைந்தனரென்று அவர்களை அரைநொடியில் காத்தருளினாரோ! அந்தச்சாம்ப பரப்பிரம்மத்தினிடத்தில் என்மனம் சுகமாக விளையாடட்டும்.

மேற்கூறிய சுலோகங்களின் ஒவ்வொரு விஷயமும் உபநிஷத் சாரங்களாகவே இருக்கின்றன. இந்த ஹரதத்தாசாரிய சுவாமிகள் முன் சுதர்சனாசாரியர் என்னுநாமத்தோடு கொடு வைஷ்ணவராகவிருந்து, வேதாந்த சூத்திரத்துக்கு3 சிவபரமான பாஷ்யமருளிய ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர் அவர்களுக்குச் சிஷ்யராகிச் சிவபெருமானது உயர்ச்சியைக் கூறும் அனேக பாடல்களும், நூல்களும் செய்திருக்கின்றார். இவரும் வைதிக சைவாத்துவைதிகளால் உச்சிமேல்வைத்து மெச்சிக் கொண்டாடப் படத்தக்கவரேயாம். இவர் கொடு வைஷ்ணவ மதத்தைவிட்டு வைதிக சைவமதத்திற் பிரவேசித்தபோது தாம் அவ் வைஷ்ணவமதத்திலிருந்து சிவதூஷணஞ் செய்த பாபநீக்கத்திற்காக ௩௨ படிகளையுடைய ஒரு இருப்பேணியைப் பழுக்கக்காய்ச்சி அதில் ஒவ்வொருபடியிலும் ஏறும்போது சிவனே முழுமுதற்கடவுள் என்பதற்குப் பிரமாணஞ்சொல்லி ஏறினரென்றால், அவர்பெருமை நம்போலியரால் பேசுந்தரத்ததாமோ!

(ஓம, சிவம்). (ஆ—ணி)

1903-௵ ஏப்பிரல் ௴-த்தில் கோயமுத்தூரில்கூடிய பிரம்மஞ்ஞான சமாஜத்தில் பிரம்மஞ்ஞானபத்திரிகையின் அதிபர் அவர்களாற் படிக்கப்பட்டது.

எனது நண்பர்களே!

இன்று இவ்விடத்தில் உபந்நியசிக்கும்படி எனக்கு ஏற்பட்ட விஷயமானது “ஈசுவரனை யடையும்வழி” “(i.e) the path to reach God” இவ்விஷயம் சாமான்னியமாய் உபந்நியாஸத்தால் தெரிந்துக்கொள்ளத்தக்கதா? அல்லது விசேஷஞானம் வேண்டுமா? என்ற சங்கை ஏற்படுவது ஸகஜம். அதற்கு ஸமாதானம் எனக்குதோன்றியவரையில் ஒருவாறுசொல்லத் துணிகி

றேன். அதாவது ஞானம் இரண்டுவிதமாய் சொல்லப்படும். அதாவது விர்த்திஞானமென்றும் அனுபவஞானமென்றும் இரு வகைப்படும். விர்த்திஞானமென்பது பிரபஞ்சத்தின் உண்மை யான ஸ்வரூபத்தையும் அதின் சிருஷ்டி ஸ்திதி லயத்திற்கு கார ணமாயும் நியந்தாவாயும் சாக்ஷியாயும் விளங்கப்பட்ட (பரம்பொ ருள்) பரமாத்மாவின் அனந்த கல்யாணகுணங்களேயும் மகிமை யையும் பின்னும் நாமரூபங்களற்றதாயும் ஸர்வத்திற்கும் ஆசிரு தமான நிர்குண பிர்ம்மத்தைப் பற்றியும் பின்னும் அதை மனி தன் அடையவேண்டிய அவசியத்தைப்பற்றியும் அதற்கு அனு ஷ்டானத்திற்குக்கொண்டுவரத்தக்க அத்தியாவசியமான விதிக ளேப்பற்றியும் சுருதி ஸ்மிருதி இதிஹாஸபுராணுதிகளாலும் சிர வணத்தாலும் மனனத்தாலும் தெரிந்துக்கொள்ளத்தக்கது விர் த்திஞானமென்றும், அவ்வாறு தெரிந்துகொண்டதை சரிவர பிரதிதனங்களிலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தும் தியாணுதிகளால் அனுபவிக்கப்பட்டுமுள்ள விசேஷஞானத்திற்கு விஞ்ஞானமென்றும் ஒருவாறுசொல்லுதல் பொருந்தும். அப் படிக்கன்றியில் மானிடப்பிறவி யெடுத்த ஒருவன் அவ்வாறு தன துகாலத்தைச் செலவழிக்காது மாயா பிரபஞ்சத்தின் அநித்திய மான சுகங்களிலும் தன தான்னியாதிகள் புத்திரன் மித்திரன் பசுமுதலான விஷயங்களிலும் பற்றுதலுள்ளவனுய் அகங்கார கார்யதால் தூண்டப்பட்டும் விஷயாதிகளால் மோகித்தும் அசுரசு பாவங்களேயே கைக்கொண்டொழுவானுனல் அவன் அஞ்ஞானி யென்றும் ஸம்ஸாரவலேயிற்சிக்கி அடிக்கடி பிறப்பிறப்புகளுக்கு ட்பட்டு மோக்ஷசுகத்திற்குப் பாத்திரனுகாமல் கஷ்டங்களே யே அனுபவிக்க ஹேதுவான அநேக ஜன்மங்களேயெடுக்கிருனென் றும் நமக்கு நன்ருய்த்தெரியவருகிறது. இப்படிக்கிருக்க விவே கியான ஒருவன் அற்பமாயும் அநித்தியமாயுமுள்ள பலன்களேய டையவிரும்புவனு?, அல்லது நித்தியமான மோக்ஷசுகத்தைய டைய விரும்புவனு?) யென்பதை நாம்சற்று பர்யாலோஜிக்கவே ண்டும். சற்று நாம் ஊகித்துப்பார்த்தால் உலகத்தில் சாசுவதமெ ன்று நமக்குத்தோன்றிவருகிற சகலவஸ்துக்களும் அழிவதை யும் பின்னற் வெகுநாள்க்கிறமித்து மருபடி தோன்றுவதையும் நமக்குச்சொந்த அனுபவத்தாலும் சுற்றுப்பக்கத்திலுள்ள நமது

சிநேகிதர்களுக்கு நமது கண்காணநேர்ந்த அநேக உதாரணங்க ளாலும் நன்கு விளங்கும். அப்பொழுது நாம் உலகத்தின் நசுவ ரஸ்வாபவத்தை ஒருவாறு உணர்ந்து எவ்விதமான வழியை கை ப்பற்றினல் ஒருவிதமான துக்கங்களுக்கு நாம் உள்ளாகமாட் டோம். ஸ்திரமான சுகத்தையடைவோம், என்று யோஜிக்க நேரிடும். அப்படியோஜிக்கநேரிடுவது இந்தமானிடஜன்மத்தைத் தவிர வேறு யெந்த ஜன்மத்திலும் ஸுலபமன்று. ஆகையால் த்தான் மானிடஜன்மம யெடுத்தற்கரிது என்று தாத்பர்யம்கொ ண்ட "ஸர்வேஷா மேவஜந்தூநாம் மானுஷத்துவம்ஹி துர்லபம்' "தோற்றமரிது மக்கள் பிறப்பு", அதாவது ஜந்துக்களிலும் மானிடஜன்மமெடுப்பதரிதென்றும் அப்படி யொருவன் எடுத்த பின்னர் முக்கியமாய் தெரிந்துக்கொள்ளத்தக்க விஷயமொன்று ண்டு. அதாவது "உடம்பினற்பெற்ற பயனுவதெல்லாம் உடம்பி னிலுத்தமனைக்காண" யென்று ஔவை குறளிலும் "இஹச் சேத் அசகத்போத்தும் பிராக்சரிர ஸ்யவிஸ்ரஸ: ததஸர்கே ஷு லோகேஷு சரீர த்துவாயகல்பதே" அதாவது சரீரம் நா சமடையு முன்னே பிம்மஸ்வரூப விஷயத்தையறிந்து கொள் கைக்கு சக்த்தியற்றவனுகில் அக்காரணத்தால் பிருதிவியாதிலோ கங்களில் ஜன்மத்தையடைகிறான், அதாவது பிர்ம்மத்தையறிகி றபர்யந்தம் ஜன்மபரம்பரை விடாதென்ற தாத்பரியம் நிறைந்த கடோபநிஷத் கடைசி வல்லி 4-வது மந்திரத்தாலும், தெ ரிந்துக்கொள்கிறோம். அவ்விதம் ஜன்மபரம்பரை நம்மை யணு காதிருக்கும்பொருட்டு நாம் கொள்ளவேண்டிய முயற்சிகள் யாவை? ஸம்ஸாரஸாகரமாகிய கடலிலாழ்ந்து மூழ்கி தத்தளித் து சுவாஸம்விடமுடியாமல் பிராணனை யிழக்க நேர்ந்த சமயத்தி ல் யெந்த அவிழ்தத்தைக் கைக்கொண்டால் அவ்வியாதி தீரும் என்ற சங்கை ஏற்படுவது யுக்தம். அதற்கு அடியில் குறித்தபடி ஸ்ரீ கிருஷண பகவான் பக்தனுகிய அர்ச்சுனனுக்கு அருளிச் செய்தபின்னல் குறிக்கப்பட்ட சுலோகத்தால் நன்கு விளங்கும்:

கீ. அ. 12 சு. 6. "யேதுஸர்வாணி கர்மாணி மையிஸந்நியஸ்யம த்பரா: அநந்நியே னைவயோகேந மாம்தி யாயந்த உபாஸதே".

ஷை சு. 7. தேஷாமஹம் ஸமுத்தர்த்தாமிர்த்தியு ஸம்ஸார ஸாக ராது, பவாமி நசிராத்பார்த்தாமய்யா வேசிதசேதஸாம்." அதா

வது-எவர்கள் சகலகர் மங்களையும் யென்னிடத்தில் சமர்ப்பித்து என்னைச்சரணமடைந்த வர்களாய் ஒரே விதமாயிருக்கிர பக்தியோகததினாலே என்னைத்தியானஞ்செய்து கொண்டு உபாசிக்கிறார்களோ என்னிடத்தில் வைக்கப்பட்ட மனதை யுடைத்தான அவர்களை ஓ, அர்ச்சுனா, மிருத்தியுவாகிற சமுசாரசாகரத்திலிருந்து அசீக்கிரமாக நான்கரையேற்றுகிறேன்" என்றார். அதாவது 1. நாப்கர்மத்தைச் செய்யவேண்டுமென்றும் அப்படிக்குக் காமஞ் செய்வதிலும் பகவானுக்கு அர்ப்பணமாய்ச்செய்துவிடவேண்டுமென்றும் அப்படி செய்துவரப்பழகப்பழக, 2. பக்தியானது ஜனிக்குமென்றும் அப்படி ஜனிததபக்தியானது ஆரம்பத்தில் சலனத்தை யடையுமாததால் அப்படிக்கன்றியில் ஒரேவிதமாய் மாறாதபக்தி வேண்டுமென்றும் அந்த பக்தி வந்தவுடன் மாத்திரம் திர்பதி யாயிராது, 3. பகவானை தியானஞ் செய்துகொண்டு பாசிக்கவேண்டுமென்றும் ஆகவே ஸாராம்சமாய் 1. ஈசுவரார்பணபுத்தி ரூபகமானகர்மம் 2. பக்தி 3 தியானம் ஆகிய மூன்றையும் னுஷட்டிக்க வேண்டுமென்றார். அப்படியனுஷ்டிப்பவாகளை தாமதமின்றி வெகு சீக்கிரத்தில் ஸம்சார ஸாகரத்திலிருந்து கறையேற்றுகிறேனென்றார். ஆகையால் தான் மனுஷயன் ஈசுவரனையடையவேண்டுவ தவசியமென்றும் அப்படியடைவதற்கு மூன்று வழிகளேற்பட்டிருக்கின்றனவென்றும் அம்மூன்று மார்க்கங்கள் முறையே கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகமென மூவகைப்பட்ட தென்றும் தெரிந்துகொள்கிறோம். அப்படி மூவ்வகைப்வட்ட மார்க்கங்களில் ஏற்கனவே சொல்லப்பட்ட சுலோகத்தின்படி கர்மம், பக்தி, என இருவகை தானே சொல்லப்ப்பட்டது. ஞானமார்க்கத்திற்கு பதிலென்ன சமாதானமென்று கேட்கக்கூடும். தியானமென்று எப்பொழுது சொல்லப்பட்டதோ அப்பொழுதே ஞானத்தை சூசிப்பித்ததாய் ஏற்படுகிறது. ஏனென்றால் "நாஸ்திதியானம் விநா ஞானம் நாஸ்திதியானம போகின:" என்றும் "நாஸ்திதியானம் ஸமம் தீர்த்தம் நாஸ்திதியானம் ஸமம்தப:! நாஸ்திதியானம் ஸமோயஞ்ஞ, தஸ்மாத்தியானம் ஸமா சரேது." என்றும் வாயு ஸ்ம்ஹிதை அத்தியாயம் 29னுள்ள சுலோகத்தால் தெரியவருகிறது. அதாவது தியானமன்றி ஞானமில்லை. யோகமில்லாத

தனுக்கு தியானமில்லை. தீர்த்தமாவது தபஸாவது யஞ்ஞமாவது தியானத்திற்கு சமானமாகமாட்டாது. ஆகையால் தியானத்தை செய்யென்று சொல்லப்பட்டிருப்பதால் தியானம் சொல்லப்பட்ட காரணத்தாலெயே ஞானமும் சித்திக்கிறது. தியானமின்றி ஞானமில்லை யோக மில்லாதவனுக்கு தியானமில்லை." என்றதனால் தியானத்திற்கு முந்தி யோகம் அவசியமாதலால் யோகம் (அதாவது சேர்க்கை யென்ற தாத்பரியத்தை விளக்குகிற "மயி ஆவேசிதசேதஸாம்" என்ற பதத்தை பிரயோகித்தார். ஆகையால் மனிதன் ஈசுவரனை யடைய முக்கிய ஸாதனமான மூன்றுமார்க்கங்களாகிய கர்மம், பக்தி, ஞானம், ஆகிய இவைகள் ஸ்தூலமாய்ப்பாக்குமிடத்து பிரத்தியேகமான மூன்று மார்க்கங்களாகக் காணப்பட்டாலும் ஸராம்சததில் ஒன்று மற்றொன்றுக்கு துணைக்கருவியாயும் ஒன்றையனுஷடிப்பதால் மற்றொன்று ஜனிதமாகக்கூடிய தாயுமிருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

(பின்னும் வரும்.) (ப—ர்)

பிரம்மஞ்ஞானம்:—73வது பக்கத்தின் (தொடர்ச்சி)

மனிதன்.

எவன் நினைக்கக்கூடியவனோ, ஸ்வஸ்தானத்தையும் தான் குடிபுகுந்திருக்கும் ஈசுவரசரீரத்தின் வாஸ்தவ இயல்பையும் பகுத்தறியக்கூடியவனோ அவனே மனிதன் என்றும் புருஷன்என்றும் சொல்லப்படுகிறான். இவன் இரண்டு சுபாவங்களோடுகூடியவன். ஒன்று நசித்துப்போவது. மற்றொன்று நசியாதது. ஒன்று க்ஷரமென்றும் மன்றொன்று அக்ஷரமென்றும் சொல்லப்படுகிறது. க்ஷரமே அக்ஷரத்திற்கு இருப்பிடமாயுள்ளது. மனிதன் ஜனிக்கும்பொழுது அவனுடைய ஜீவன் சிருஷ்டிக்கப்படுவதில்லை. ஜீவனோ பரமாத்மாவின் ஒரு அம்சம். கல்பாரம்பமுதல் பிரளயம்வரையில் இருக்கப்பட்டவன் அக்ஷரபுருஷனே. இவன்தான் மானசிகபுத்திரன். க்ஷேத்திரஞ்ஞன். முந்திய அத்தியாய

த்தில் பிரம்மாண்டத்தில் ஏழுலோகங்கள் அல்லது பூமிகைகள் உண்டென்றுவியவகரிக்கப்பட்டதல்லவா? அதைப்போலவேபிண்டாண்டமாகிறமனிதனிடத்திலும் ஏழுதத்துவங்கள் இருக்கின்றன. பிரமாண்டத்தின் லோகங்களும் பிண்டாண்டத்தின் தத்துவங்களும் முறையே சம்மந்தப்பட்டிருக்கின்றன. மனிதனுடைய தத்துவங்கள் ஸ்தூலசரீரமென்றும் (2) லிங்கசரீரமென்றும் (3) பிராணனென்றும் (4) காமம் (5) மனது (6) புத்தி (7) ஆத்மா என்றும் சொல்லப்படுகின்றன. இவைகளையே வேதாந்த சாஸ்திரங்களில் அஞ்சு கோசங்களாகவும் ஆத்மாவாகவும் ஸ்தூல, சூட்சும, காரணஉபாதிகளாகவும் ஆத்மாவாகவும் வியவகரிக்கப்டுகின்றன. பின்னால் காணப்படும் படகத்தால் இவைகளின் விபரங்களை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். இந்த ஏழுதத்துவங்களில் சில எல்லாரிடத்திலும் மற்றவை சிலரிடத்திலும் மட்டும் பக்குவமாகி வெளிப்படுகின்றன. எந்தந்த அம்சங்கள் அப்படி வெளியாகின்றனவோ அந்தந்த அம்சங்களில் மனிதனுடைய பிரஞ்ஞை விளங்க்கூடும். இவைகளுக்கு சாதிருசமாயிருக்கின்ற பிரம்மாண்டத்தின் தத்துவங்களையும் அவன் அறியக்கூடும். தத்துவங்கள் என்பது பிரஞ்ஞாபேதங்களைத்தவிற வேறொன்றுமல்ல. ஒவ்வொரு விதப்பிரஞ்ஞையும் ஒவ்வொரு லோகங்களில் வியவகரிக்கிறது. ஸ்தூலபூமிகையில் ஸ்தூலபிரம்மாண்டமும் அவ்வாறே மற்ற பூமிகளில் அவைகளுக்கு ஸாதிருசியமான பிரம்மாண்டத்தின் மற்ற பாகங்களும் அறியப்படுகின்றன. எல்லா தத்துவங்களையும் சுவாதீனப்படுத்தினவர்கள் பிரம்மாண்டத்தின் கண்ணுள்ள சகல இரகசியங்களையுமறிவரர்கள். பிரக்ஜை வெவ்வேறு விதமாயிருக்குமென்பதை பின்வருமுதாரணத்தால் தெரிந்துகொள்க.- பசி, தாகம், அடி, காயம் முதலியவைகளையுணரும்போது ஸ்தூல சரீரமாகிற ஸ்தூலதத்துவத்திலும் யுத்த களத்தில் அதிகுரூரமாய் யுத்தஞ்செய்யும்போது, ஸ்தூலசரீரத்தை மறந்து அடி, காயம், முதலியவைகளையுணராமல், மானஸிகதத்துவமாகிய மனோமயகோசத்தில் தனது பிரக்ஜையும் நிலைநிறுத்துகிறான். ஆகையால்தான் காயம், அடி, முதலியவைகளால் ஸ்தூலசரீரத்திற்குண்டாகும் வருத்தத்தை அவன் அப்பொழுது அறியாமல் யுத்தம்முடிந்தவுடன் அவனுடைய பிரக்ஜை ஸ்தூலசரீரத்திற்

குத்திரும்பிவந்து அந்தவலியை உணருகிறது. ஒருவன் ஏகாக்கிர சித்தத்துடன் தத்துவ விசாரம் செய்துகொண்டிருக்கும்பொழுதாவது அல்லது வேறு ஆழ்ந்த யோஜனையிலிருக்கும்பொழுதாவது பசி, தாகம்முதலியவைகளையும்விருப்பு, வெறுப்புமுதலியஸ்தூலவிகாரங்களையும் மனோவிகாரங்களையும்மறந்துவிடுகிறான். அப்பொழுது அவன் மனது ஆலோஜனையாகிற பூமிகையில் (Mental world)ல் பற்றுதலைபடைந்து விளங்குகிறது. காமம், குரோதம், தத்துவவிசாரம் முதலியவைகள் பலப்பட்டு நிற்கும்பொழுது அவைகளில் தத்பரனான ஒரே மனிதன் வெவ்வேறாக காண்ப்படுகிறான். அதற்குக்காரணம் நமது பிரஞ்ஞையிலுண்டாகும் ஒவ்வொரு வித்தியாசங்களே. மனிதனுடைய தத்துவத்தை நாம் நன்றாய் விசாரிப்பதனால் அவன் இப்படிப்பட்டவன், அவனுடைய சக்திகள் முதலியவைகள் நன்றாய் விளங்கும். அவனைப்பிரித்தறியாவிட்டால் இவைகள் நன்றாய் விளங்கமாட்டாது. மேற்சொல்லிய 7 அம்சங்களில் முதல் நான்கு நசித்துப்போகும். பாக்கியாகிய மனசு, புத்தி, ஆத்மா, நசிக்காமல் அநேகஜன்மங்களில் சம்மந்தப்பட்டு நிற்கும். இதற்கே க்ஷேத்திரஞ்ஞன் என்றும் கூடஸ்தனென்றும்சொல்வது வழக்கம். மற்ற நான்கும் ஸ்தூலசரீரத்தின் மரணம் முதல் நாளாவர்த்தியில் நசித்துப்போகின்றன. வேறு சரீரங்களின் உற்பத்திக்குபயோகப்படுகின்றன. இவைகளைப் பின்னும் விளக்கும்பொருட்டு மதுரை பிர்ம்மஞ்ஞானசபையாரால் பிரசுரஞ் செய்யப்பட்ட நாமிருக்கும் வீடு, ஆன்மாவும் அதன் கோசங்களும் என்ற பத்திரிகை கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—

ஓம்.

நாமிருக்கும் வீடு.

ஆன்மாவும் அதன் கோசங்களும்.

நாமிருக்கும் வீடு இந்த சரீரமே—சரீரமென்றால் சிதறிப் போகுதல் அல்லது குறைவுபடுதல் என்ற தன்மையை உடையது

எனப்பொருள் பெறும். தேகம் என்றது அதன் பரியாயபதம். இதன் பொருள்—விருத்தியடைதல், லக்ஷணையாக பிறப்பு, இருப்பு, வளர்தல், திரிதல், குறுகுதல், நசித்தல் என அறுவிகாரமும் உள்ளது எனப்பொருள்படும்.

'தொக்கு, உதிரத்தோடு, ஊன், நிணம், என்பு,
சுக்கிலம் தாதுகள் ஏழு'—(ஔவைகுறள்.)

இவையெல்லாம் கூடி ஸ்தூல உடம்பு ஆயது. இது அன்னமயமாம்.

சரீரம்விட்டு உயிர் நீங்கினால், சத்து போயிற்று என்பார், சத்து எனறால் உயிர் என்று அர்த்தம். அதன் பின்னர், ஸ்தூலசரீரத்திற்கு பிணம் என்று பெயரிடுவர். பெற்றதாயும், கொண்டபெண்டிரும், கொஞ்சிக்குலாவினதைவிட்டு தனிமையாக இருக்கப்பயப்படுவர். இவ்வுடலை, "இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்.

"ஊரெலாங்கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச்சுட்டிட்டு
நீரினில்மூழ்கி நினைப்பொழிந்தார்களே."

"முப்பது முப்பது முப்பத்தறுவரும்
செப்ப மதிலுடையகோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிலுடைக்கோயில் சிதைந்தபின்
ஒப்பவனைவரும் ஒட்டயெடுத்தாரே."—(திருமந்திரம்)

96 தத்துவங்கள் சரீரமாகிய கோயிலில் உள்ளன. சரீரம் சிதைய, ஒருங்கே அத்தத்துவங்கள் பிரிந்து வெளிபேறிவிடும்.

ஆன்மா என்றால் எங்கும் வியாபி என்று பொருள். இதனுடன் தத்துவங்கள் 96, 48, 36, 27, 16 என்று பலவாறாகப் பிறித்து, பலதருசனங்களில் சொல்லுகிறதுண்டு. ஆன்மா நீங்கலாக, பிரஹ்மஞான சபையார் - 6 அம்சங்களாகவும், வேதாந்திகள் - 5 கோசங்களாகவும், ராஜயோகிகள் 3 உபாதிகளாகவும் மேற்கண்ட தத்துவங்களை பகுபாடு செய்து கூறுவர். அவைகளை இங்கு விவரிப்போம்.

நாமிருக்கும் வீடு அடியில்வரும் அட்டவணையால் ஒரு குடிசில் அல்லவென்றும் பலகுடிசில்கள் உள்ளனவென்றும் வெளியாகும்

பிரஹ்மஞானி (Theosophist)	வேதாந்தி.	ராஜயோகி.
1. ஸ்தூலசரீரம்	அன்னமயகோசம்	ஸ்தூலஉபாதி
2 லிங்க சரீரம்	பிராணமயகோசம்	
3. பிராணன்		
4. காமமனசு அசுத்தமனசு	மனோமயகோசம்	ஸூக்ஷ்ம உபாதி
5. சுத்தமனசு விஞ்ஞானம்	விஞ்ஞானமயகோசம்	
6. புத்தி	ஆனந்தமயகோசம்	காரணஉபாதி
7. ஆன்மா	ஆன்மா	ஆன்மா

இவ்விதவேற்றுமைக்குக் காரணம் அவரவர் நோக்கத்தின் வேற்றுமையேயாம், 6 என்று வகுத்த பிரஹ்மஞானியின் கருத்து என்னவென்றால்—மூன்று உபாதிகளை அங்கீகாரம் செய்து கொண்டு ஒவ்வொரு உபாதியையும், உடல் (form) பாகம் என்றும், உயிர் (life) பாகமென்றும் பிறித்திருக்கின்றனர். ஸ்தூல தேகம் லிங்கசரீரம் இவைகளை நியாமகம் செய்யும் பிராணன், இது முதல் இரட்டை. காமம் மனசு, அசுத்தமனசு, அடங்கிய தேகத்தை நியாமகம் செய்யும் விஞ்ஞானம், இது இரண்டாம் இரட்டை. காரணசரீரம் இதுவே புத்தி, இது மூன்றாவது. ஆன்மா இம்மூன்றிலுமிருப்பவன்.

(பின்னும்வரும்.)

அஷ்டமிப்பிரதக்ஷிணம்.

அதன் உண்மை.

"உடம்பினைப் பெற்றபயன் ஆவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக்காண்"—ஔவைகுறள்.

மார்கழிமீ அபரபக்ஷ அஷ்டமி திதி காலை 5-மணிக்கு ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவராள் ரிஷபாரூடராய் ஆலபத்தினின்று புறப்பட்டுப் பெரிய கடை வீதிக்குச் சென்று, அவ்விடத்தில் ஜவந்தி புஷ்பத்தினால் நிர்மாணம் செய்யப்பட்ட இரதத்தில் வீற்றிருந்து, தை வீதியாகிய கோட்டை வீதியைப் பல வைபவங்களுடன் பிரதக்ஷணம் வருவார்கள். அச்சமயம் பக்தர்கள் பரிசுத்தவான்களாய்த் தரிசனம் செய்து அந்த இரதத்தின் கூடவே வருவார்கள். விசேஷ பக்தர்கள் மதுரையின் ஏழு பிரகாரங்களையும் பிரதக்ஷணஞ் செய்து, எறும்புவளைகளைத் தேடிக்கண்டுபிடித்து, அவைகளுக்கு அரிசிக்குறுநொய்யிட்டுக் கடைசியில் கோவிலுட்சென்று வந்தவளை வழிபாடுகளுடன், ஸ்வாமி தரிசனஞ் செய்து வீட்டுக்குச் சென்று பிராமண போஜனம் செய்வது வழக்கம். இதன் ஐதீகம் இன்னதென்று விசாரிப்போம். உத்கிருஷ்டமான சிவக்ஷேத்திரங்கள் பல இருந்தும் இவ்வுற்சவம் இம்மதுரை க்ஷேத்திரத்துக்கே உரித்தானது.

முன்னொரு காலத்தில் இந்நகருக்கு 12-மைலுக்குத் தெற்கே இருக்கும் திருமங்கலம் என்ற ஊரில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் பெயர் கடோரபாவி அல்லது கொடும்பாவி. அவன் செய்த கொடிய பாவச்செயல்களின் காரணத்தால் இந்தப்பெயர் அவனுக்கு ஏற்பட்டது, ஒருநாள் கோவிலுக்குச் சுவாமிதரிசனம் செய்ய வந்த ஒரு சாதுப்பிராமணனை இக்கொடும்பாவி பலவிதமாக நிந்தித்தான். உடனே அந்தப் பிராமணன் பாண்டிய ராஜனிடம் முறையிட்டான். ஊரெல்லாம் அக்கொடும்பாவிக்கும் பகையாகையால் பாண்டியன் அவன் கெட்டகுணத்தைக் கருதிச்சிறையிலிட்டான். அக்கொடும்பாவியும் சிறைச்சாலையிலேயே இறந்தான். அவன் தன் கொடிய பாவச்செயல்களுக்காக நரகவேதனை அனுபவித்த பிறகு திருவாலவாய் க்ஷேத்

திரமாகிய இம்மதுரையில் இறந்தமையால் அந்நகரத்தினின்றும் நீங்கி மதுரைக்குப்புறம்பேயுள்ள சிந்தாமணியென்னும் ஊரில் தாமந்த இடையன் குலத்தில் தள்ளுபட்ட ஓர் இடையனுக்குப் பிள்ளையாகப் பிறந்து பசுக்களை மேய்த்துவந்தான். அப்புண்ணியத்தால் பரமசிவன் இவனைக் கறைபேற்றக் கருணை பூண்டவனாய் உலகமாதாவாகிய ஸ்ரீ மீனாட்சி தேவியை நோக்கி இக்கொடும் பாவிக்கு முக்தி தரக்கருதியிருக்கிறேன். நீ ஒரு பசு உருவம் எடுத்து அவனது வயலிலுள்ள பயிரை மேய்வதுபோற் காட்டினால் அவன் உன்னைத் துரத்துவான். நீ ஓட்டம் பிடித்தால் அவனும் ஓடி உன் வாலைப்பற்றிவருவான். நீ மதுரைக் கோட்டைவீதி முதல் எழு வீதிகளையும் வலமாகச் சுற்றி ஓடி, நமது சந்நிதியிலிருக்கிற ரிஷபத்தின் பின்புறம் அவனை தள்ளிவிட்டுப்பசு உருமறைந்து நமது அருகே வரக்கடவாய், என்று கட்டளையிட்டருளினர். தேவியும் அவ்விதமே செய்ய, அங்கே விழுந்த கொடும்பாவி ஸ்தூலதேகம் நீத்துச் சூக்ஷ்ம தேகம்பெற்று விமானமேறிக் கைலாசம் சென்று பரமசிவன் கிருபைக்குப் பாத்திரனானன். இக்கதையின் வரலாற்றை ஸ்காந்த புராணத்திலே பிரம்ம சம்ஹிதையிலே 34-ம் அத்தியாயத்திலே குருகீதையில் விரிவாய்க்கண்டு கொள்ளலாம். இக்கதையில் மறைவான பல தத்துவங்கள் உள. அவையாவன:—

1. மதுரைமாநகர் ஸ்ரீசக்ராகாரமாக அமைக்கப்பெற்றுள்ளது. ஸ்ரீசக்ரமோ விகாசமாயுள்ள பிரபஞ்சத்தின் பிரதிகமாம். எழு பிரகாரங்கள்என்பது, எழுதரம்சுற்றிவந்ததுஎன்பதும், ஒரு பிரமாண்டத்தின் எழு விகாச முறைகளும், (seven chains or schemes of Evolution) ஒவ்வொரு விகாச முறையின் எழுபூமிகளும், (globes,) அதன் எழுவட்டங்களும் (rounds,) ஒவ்வொரு பூமியில் எழு ஜீவவர்க்கங்களும் இவ்விதமாக விகாசமுறையின் ஒவ்வொன்றும் எவ்வேழாக நடைபெறுகின்றது என்பதைக் காட்டுகின்றது. சப்த வியாகிருதிகளான மேல் நோக்குகின்ற லோகங்களான பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், மகர்லோகம் ஜனர்லோகம் தபோலோகம், சத்தியலோகங்களும் கீழ்நோக்குகின்ற ஸ்தலங்களான அதல, விதல, சுதல, தலாதல, ரஸா

தல, மஹாதல, பாதால முதலிய இடங்களும் இதில் சூசிப்பிக்கப் பெற்றிருக்கின்றன. பிரபஞ்ச சிருஷ்டியில் எல்லாம் ஏழு ஏழாக அமைகின்றனஎன்பது, முண்டக உபநிஷத்தின் தாத்பரியமுமாம். இதைப்புராணங்கள் விஸ்தாரமாகச் சொல்லுகின்றன.

ஜீவவர்க்கங்களிலும், பூமிகளிலும், பூமிவட்டங்களிலும் பல முறை ஜீவனுனவன் சரீரங்கள் எடுத்து மேன்மேலும் விகாசம் பெறுகிறுன். இதைப்பற்றி சநாதநதர்மம் 3-ம்பாட புஸ்தகத்தில் 6-ம் அத்தியாயத்தில் வேத சாஸ்திர ஆதாரங்களுடனே விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறதை பார்க்க. இதையே மாணிக்கவாசக சுவாமிகளும் அழகாய் அடியில் வருமாறு சொல்லியிருக்கிருர்.

"புல்லாகிப் பூடாய்ப்புழுவாய்மரமாகிப்
பல்மிருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகிமுனிவராய்ச்த்தேவராய்ச்
செல்லாஅநின்றஇத்தாவரசங்கமத்துள்
எல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தேன்எம்பெருமான்.

2. ஈசுவரியின்றி உலக விகாசமில்லை. சரீரமெல்லாம் மூலப்பிரகிருதியின் பரிணுமங்கள். மூலப்பிரகிருதியே ஈசுவரி. அதனுல் பசுவின் வாலைப்பற்றிக்கொண்டே சுற்றியதென்பது பசுத்தன்மையைப் பற்றிச்சொல்வது, அதாவது பல ஜீவ சரீரங்கள் பெறல் என்பதாம். சரீரம் எடுத்தலே ஈசன் அருள் பெருதலாம். புருஷஸூக்தத்தில் சொல்லியபடி திரோதானம் அல்லது திரோபாவம் என்பது இறைவன் அருளால் சரீரமெடுத்து அதனுள் ஈசுவரன் அம்சமாகிய ஜீவன் மறையும் நிலை அல்லது கதியாம். பகவத்கீதை 15-ம் அத்தியாயம் 7-ம் சுலோகத்தில் "ஜீவன் என்னுடைய அம்சம்" என்று கிருஷ்ணபகவான் உபதேசித்திருக்கிருர்.

என்னரு மம்சமாய் இவ்வுலகிற் சீவனுப்
முன்னுரநின்று முயலும் உயிர்—தன்னுரும்
ஐம்புலனும் நெஞ்சும் அவையாறை யும்வலிக்தும்
வெம்புலத்துச் சேர விரைந்து—பகவத்கீதை வெண்பா

[வலிக்கும்-இழுக்கிறான்]

இக்கருத்தையே திருமூலநாயனார் தம் திருமந்திரத்தின் திரோபவ அத்தியாயத்தில் அடியில் வரும் செய்யுளில் விளக்கி இருக்கின்றார்.

"மண்ஒன்றுதான்பலநற்கலமாயிடும்
உண்ணின்ற ஊன்கள் எல்லாம் ஒருவனே
கண்ணொன்றுதான் பலகாணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணமாகிநின்றானே."

3. துவஜஸ்தம்பத்தின் அருகாமையில் கடோரபாயி வந்தனன் என்பதும் மானுஷ சரீரமெடுத்தலும் அதன் முக்கிய அங்கமாகிய வீணாதண்டைப்பற்றி அதாவது அதனுள் அமைந்துள்ள சக்தியை யோக சாஸ்திர முறைப்படி கைப்பற்றி அதன் மூலமாய் மெய்யுணர்வுபெறுகிறான், என்பதைச் சூசிப்பிக்கின்றது. அதாவது ஈசுவர சாயுஜ்யத்தை அடைகிறான். அதாவது யமம், நியமம், ஆசனம், பிராணாபாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய அஷ்டாங்க யோகவழிச் சென்று, அதன் மூலமாய் ஈசுவரனை சாக்ஷாத்கரிக்கின்றான். துவஜஸ்தம்பம் என்றால் முதுகெலும்பில் மத்தியில் உள்ள வளையங்களின் கோவை. வீணாதண்டு அதனுள் இருக்கின்ற முப்பான்மையான இடை, பிங்கலை, சுழுமுனை, நாடிகள் யோகசாதனையில் முக்கியமான கருவி.

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்கட்டி
வீணா தண்டூடே வெளியுறத்தானோக்கிக்
காணாக்கண் கேளாச்செவியென் றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும்வழி அதுவாமே—திருமந்திரம்

ஷை அஷ்டாங்கங்களைப் பற்றிச் சுருக்கமாக இதனடியில் எழுதுவோம்.

இயமம்—1 மனம், வாக்கு காயத்தால், எந்த ஜீவனுக்கு எவ்விதத்துன்பமும் செய்யாதிருத்தல், அஹிம்ஸை என்றதர்மத்தை அநுஷ்டித்தல், ஜீவகாருண்யத்தை அபிவிர்த்திசெய்தல்; இதனால்தான் இன்று ஜனங்கள் எறும்பு வளைகளைத் தேடி குறுநொய்யிடுகிறார்கள்.

2. பொய்யாமை விரதம் பூணல்.

3. மனநேர்மையடைதல்.

4. இந்திரியங்கள் அவைகள் போன வழி விடாமல் அடக்கல்.

5. ஆசை இன்மை.

நியமம்—1. மனசுத்தம், 2 மனச்சாந்தி

2. மநோநிக்கிரகம், வைராக்கியம்.

3. சாஸ்திரப்பபிற்சி.

4. இறைவனிடம் அன்பின் மிகுதி.

ஆசனம்—மனசு அங்குமிங்கும் அலைபாமல் சமாதானமாக இருக்க அனுகூலமான சுக ஆசனம்.

பிராணாயாமம்—மனச்சலனத்தை தவிர்க்க ஏதுவாக, பிராணனை அடக்குதல், இது குருவின் மூலமாக நேரில்தெரிந்து கொள்ளவேண்டும்.

பிரத்தியாகாரம்—மனத்தை(அந்தர் முகப்படுத்தல்; வெளியில் விஷயங்களை நாடித்திரியும் மனத்தை உள்ளே நோக்கும்படி செய்தல்.

தாரணை, தியானம், சமாதி, இம்மூன்றையும் சேர்த்து சமயமம் என்று சொல்லுகிறதுண்டு.

தாரணை—மனத்தை ஒரே லக்ஷியத்தில் கட்டுதல், தியானம் கட்டிய மனத்தை அந்த லக்ஷியத்திலேயே தயிலதாரை போல இடையறாது நிறுத்துதல்.

சமாதி—லக்ஷியம், மனசும் ஒன்றுகுப்படி செய்தல்; திரிபுடியான உபாசகன் உபாசியம், உபாசனை இம்மூன்றின் வேற்றுமை அற்ற நிலைமை.

இவைகளைப்பற்றி விஸ்தாரமாக சாஸ்திரங்கள் மூலமாகவும் சரியான குருமூலமாகவும் அறிந்து கொள்ளுக.

நுட்ப புத்தியால் ஆலோசித்துப்பார்த்தால், உத்ஸவங்கள், சாதாரண ஜனங்களுக்கு முதலில் விளையாட்டையும் வேடிக்கைகளையும் காட்டி, பின்பு அறிஞர்களுக்கு மெய்யறிவைப் போதிக்கின்றன. இம்மாதிரியான நோக்கத்துடனே நம் முன்னோர்களான மஹரிஷிகள் உத்ஸவாதிகளை ஏற்படுத்தியுள்ளார்;

இன்று நாம் கொண்டாடுகிற உத்ஸவத்தின் உண்மையான கதையை அறிந்து அதனுள் புதைந்துள்ள ஞான தத்துவங்களை மனத்தில் வாங்கி, அவைகளில் எம்மாத்திரம் நம்மனுஷ்டானத்திற்குக்கொண்டுவர இயலுமோ அதை அனுஷ்டித்து மேன்மேலும் ஞானமுறையில் ஈசுவரனை உபாசிப்போமாக.

பல்லூழிகாலம் பயின்று அரனை அர்ச்சித்தால்
நல்லறிவு சற்றே நகும்—(ஔவை குறள்)

ஓம், தத், சத்.
T. S, Madura.

உ

ஸாவித்திரியும் அவளுடைய பதிவிரதா தர்ம விசேஷமும் தபோமகிமையும்.

சென்னப்பட்டணத்தில் அரசனாகிய அஸ்வபதியென்பவர் ரொம்ப உதாரகுணமுள்ள அரசனாயிருந்ததோடு அவர்களுடைய குடிகளாலும் ரொம்ப கொண்டாடப்பட்டு வந்தார். ஆனால் பிள்ளையில்லையென்ற ஒரு குறைமாத்திரம் ஜாஸ்தியாக யேற்பட்டது, ஈசுவரனைக் குறித்து ரொம்பவும் பிரார்த்தித்து கடைசியில் ஸாவித்திரியென்ற ஒரு புதல்வியைப் பெற்றார். அப்பெண் நாளாவிருத்தியில் அதி புத்திசாலியாயும் நல்லொழுக்க மேவிருதாகக்கொண்டவளானாள்; சிலகாலம் கல்யாணமாகாமல் யிருந்தாள். சிற்றரசர்களையும் பிரபுக்களையும் அவள் மணந்துகொள்ள பிரியப்படவில்லை; அவள் பெற்றோர்கள் கடவுளைக்குறித்து தக்கவரன்கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். தவிர அவளுடைய ரூபலாவண்யத்துக்கு இசைந்தவராயும் தங்களால் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு தக்க புருஷனை அவளே குறிப்பிடலாமென்றும் அநுமதி கொடுத்தார்கள்.

கடைசியில் ஸாவித்திரியென்பவள் அப்பட்டணத்திற்கருகிலுள்ள காட்டில் வசித்துவந்த மகரிஷிகளின் ஆசிரமத்திற்க்கு சென்று சாஸ்திராப்பியாசம் செய்துவந்தாள். அப்பொழுது

அங்கு வசித்து வந்த ரிஷிகளின் புத்திரர்களில் கெம்பீரமான
வெகு அழகுள்ள ஒரு வாலிபனைக்கண்டாள். அவ்வாலிபனும்
இவளைப்பார்க்க இவர்களுடைய மனமும் ஒன்றுபட்டு ஒரு வார்
த்தையும் பேசிக்கொள்ளாமல் பிரிந்தார்கள்.

அவள் மாத்திரம் தன்னுடைய குருவின் இருப்பிடம் செ
ன்று பாடங்கள் கற்றுங்கொள்ள ஆரம்பித்தபோது தன்னுடை
ய மனம அதில் பதியாமலிருந்ததை குரு அறிந்து அதற்கு கா
ரணம்பென்ன வென்று வினவ ஸாவித்திரியும் உண்மையைச்
சொன்னாள். உடனே அவளுடைய குருவாகிய அந்த முநீசுவரர்
அவள் கண்ட வாலிபனுடைய பெயர் சத்தியவானென்றும் வன
த்தில் அப்பொழுது வசித்து வந்த த்யூமஸேனனென்ற ரிஷியின்
யேக புத்திரனென்றும் அவனுடைய பிதாவானவர் ஓர் காலத்
தில் சால்வர்களுக்கு அரசனாயிருந்ததையும் அவருடைய சத்து
ருக்களால் இராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டதையும் பிறகு
அவர் தன்னுடைய பாரியை புத்திரன் இவர்களோடு வநத்தில்
வசித்துவருவதையும் அவருடைய புத்திரன் பெலத்திலும் பெரு
ந்தன்மையிலும் சத்தியத்திலும் வெகு சிரேஷ்டனென்றும் அவ
ன் பொய் சொல்லவாவது சிநேகிதனை வஞ்சிக்கவாவது தன்
வாக்கினால் சொல்லியதை பிறகு மாரியதாகவாவது தெரிந்ததே
யில்லையென்றும் ஆகையினாலே தான் சத்தியவானென்ற பெயர்
அவனுக்கு கிடைத்ததென்றும் சொன்னார்.

ஸாவித்திரி தன்னுடைய குருவிற்கு வந்தனம் செலுத்தி
விட்டு தன்னுடைய கிரஹத்திற்க்கு வந்து தாயாரிடம் தனது
அபிப்பிராயத்தை தெரிவிக்க பிதாவும் அந்த சமாசாரத்தை தெ
ரிந்துகொண்டு நாரதமகரிஷியை ஆலோசிக்க அவர் ஸாவித்திரி
யை நோக்கி வேறு யாரையாவது புருஷனாக வரிக்கும்படி. சொ
ல்ல அவள் மானஸீகமாய் வரித்த சத்தியவானென்றபுருஷனைத்
தவிர வேறொருவரையும் விரும்புவதில்லை யென்று சொன்னாள்.
உடனே திருகாலத்தையும்அறிந்த அம்மகரிஷிசத்தியவானென்ற
அவ்வாலிபன் அற்பாய்சுள்ளவனென்றும் பின்னும் ஒருவருஷ
ந்தான் ஜீவிப்பானென்றும் சொன்னார்.

அவளுடைய பிதா இதைக் கேட்ட உடனே ரெம்பதுக்க
த்தை யடைந்து வேறு புருஷனை வரிக்கும்படி வேண்டி
யும் தான் இரண்டுதரம் வரிக்கக்கூடாதென்றும் பூர்வத்தில் சத்
தியவானையே புருஷனாப் வரித்துவிட்டதாயும் பிடிவாதமாய்ச்
சொல்ல உடனே ஸாவித்திரியினுடைய உறுதியும் பக்தியையும்

கண்டு ஆச்சரியமடைந்து அவளுடைய பிதாவை நோக்கி அவள் இஷ்டப்படிக்கே அநுமதி கொடுக்கும்படிக்கும் விதியை மதியினல் வெல்லாமென்றவாறு ஈசுவர அநுக்கிரகத்தாலும் அவளுடைய பக்திவிசேத்தினுலும் அவளுடைய விபத்து தீரலாமென்று சொன்னர்.

இன்னும் வரும். (ப—ர்.)

பிரச்னேத்தரங்கள்.

---

1 (பி) பக்தியோகம் சிறந்ததா; ஞானயோகம் சிறந்ததா; அல்லது ஒன்று மற்றென்றுக்குப்படியா;

11 (பி) பக்தியோகிஞானியுமாவரா; பக்தன் ஞானமடைந்துதான் தீரவேண்டுமோ; அல்லது பக்தியினுலேயே முக்தி கூடுமா;

111 (பி) 1 பக்திமார்க்கத்திற்கும் ஞானமார்க்கத்திற்குமுள்ளதாரதம்மியமென்ன;

பத்மநாபன்
(போர்ட் பிளேர்.)

1 (உ) இரண்டும் சிறந்ததே, பக்தியன்றியில் ஞானமடைவது துர்லபம். எவ்விதயோக மப்யவிக்கவேண்டுமென்று இச்சித்தாலும் பக்திதான் முதற்காரணம். பக்தியிருக்குமேயானல் ஸ்வரூபஞானம் வித்திக்கும், பக்தியில்லாவிட்டால் ஒன்றையும் மடையமுடியாது.

11 (உ) பக்தியோகிஸ்வரூப ஞானத்தை பக்திவிசேஷத்திற்குத்தக்கபடி சீக்கிரத்திலோ அல்லது காலக்கிறமேணவோ அடைவான். கேவலம் விர்த்திஞானத்தினல் முக்திகூடாது. பக்தியினல் அனுபவஞானம் வித்திக்குமாதலால் முக்திகூடும். (பகவத்கீதை அத். 11. சு. 54, அத் 18 சு. 55 பார்க்க.) ஓ! அர்ச்சுன! ஓ! சத்துருக்களை தபிப்பிக்கிறவனே! இந்தவிசுவரூபியான என்னிடத்தில் வைக்கப்பட்ட பக்தியினலேயே எதார்த்தமாக அறிகிறதற்கும் பார்க்கிறதற்கும் என்னுடைய சுபரூபத்தையடைகிறதற்கும் நான் தகுந்தவனயிருக்கிறேன்.

அ. 11. சு. 54.

பிரசனோத்தரங்கள் (தொடர்ச்சி)

நான் எவ்விதபரிமாணம் சுவரூபம் இவைகளையுடையவனு யிருக்கிறேனோ அவ்விதமாக வென்னை பக்தியினாலறிகிறான். அப்படியறிந்த பிறகு உடனே பரமாநந்த சுவரூபியாய்விடுகிறான்.

அ. 18. சு. 55.

111 (உ) பக்திமார்க்கத்தினால் எப்பொழுதும் பகவானு டைய திவ்விய கல்லியாணகுணங்களை யனுஸந்தானம் செய்தும் அவரை அர்ச்சனை செய்தும் தியானித்தும் கடைசியில் ஈசுவர சாக்ஷாத்காரத்தை யடைகிறான். ஆனால் நல்லபக்தன் ஈசு ரனைத்தவிர மற்ற உலக வியாபாரங்களை நன்றாய் மறந்துவிடுகி றான். ஈசுவரத்தியானமே மேலிட்டிருக்கும்.

ஞானமார்க்கம்:— விர்த்திஞானமென்றும் அனுபவஞான மென்றும் இருவகைப்படும். விர்த்திஞானமென்பது ஸிருஷ்டிக் கிரமத்தையும், அநேக லோகங்கள், தத்துவங்கள், ஈசுவரனை யடைய சாதனங்கள் முதலியவைகளையும் சாஸ்திரங்கள் மூல மாகவோ பெரியோர்கள் மூலமாகவோ தெரிந்துகொள்ளுதல். அனுபவஞானமென்பதுதான் அப்படித்தெரிந்து கொண்டதை அனுஷ்டானஞ்செய்து ஈசுவரனையடைய முயலுதல்.

விர்த்திஞானமாத்திரங் கூடியவன் பக்தி யில்லாவிட்டால் வித்யாகர்வத்தால்க் கெட்டுப் போய்விடுவான். பக்தியிருந்தா லன்றியில் அனுபஞானத்தையடையமாட்டான். மோக்ஷத்தை யும் அடையமாட்டான்.

சமாசாரக்குறிப்புகள்.

திருவாரூர் பங்குனி உத்ஸவமானது வடபாதிமங்கலம் சோமசுந்திர முதலியாரவர்களால் நடத்தப்பட்டு வந்தது. ஆனால் இதில் சில விஷயங்கள் பஞ்சாயத்தாருக்கு ரொம்ப அகௌரவத் தை கொடுக்கக்கூடியவைகள், என்னவென்றால், உத்ஸவத்தை விமர்சையாய் நடத்தாமலும் துவஜ ஸ்தம்பத்திற்கு சென்ற வரு ஷம் மரம் ஒடிந்துபோனது முதல் உத்ஸவம்வரையில் ஒருபிரயத் தினமும் செய்யாமல் கூர்வாயில் பனைமரம் சம்பாதித்துப் போட் டதும் தனக்குள் ஏராளமான ஆள்களிருந்தும் ஸ்வாமி தூக்குவ தற்கு பூண்டி ஆள்கள் இஷ்டமில்லாமல் போய்விட்டார்களெ ன்ற காரணத்தைக்கொண்டு அகாலத்தில் ஸ்வாமிகள் புரப்பாடா னதும் சில தினங்களில் சில உத்ஸவமூர்த்திகள் வீதியில் புரப்பா

டில்லாமலிந்ததும் ஓர் தினத்தில் ஓர் உத்ஸவமூர்த்தி ரெஸ்தாவில் விழுந்ததும் ரெதத்திற்கு அச்சு, சக்கரம், தயாராகாமலிருக்கும் பொழுது ரெதத்தில் ஸ்ரீ-தியாகருஜாவை தென்னல்காற்று வாங் கும்படி சாவகாசமாய் வீற்றிருக்கும்படிசெய்ததும், ரொம்பவும் இகழத்தக்கவைகள். இவ்விதம் பஞ்சாயத்து பார்ப்பதைவிட ராஜிநாமா கொடுப்பதாவது, அல்லது வேலை செய்யாமல் விலகி யிருப்பதாவது நலமென்பதை ஏன் முதலியாரவர்கள் கவனிக்க வில்லையோ? பூராவிபரம பிந்திவரும்.

***

தஞ்சாவூரில் பிருஹ்தீசுவரஸ்வாமிகோவில் உத்ஸவம் வெகு விமரிசையாய் நடந்து வருகிறது. இது ரொம்பவும் சிலாகிக்கத் தகுந்தது.

***

மன்னார்குடி ஸ்ரீ-ருஜகோபாலஸ்வாமி கோவில் உத்ஸவம் வெகு விமரிசையாயும் ஒழுங்காயும் சிரத்தையுடனும், தண்ணீர்க் குன்னம் மகா-ள-ஸ்ரீ பாலகுருஸாமி ஒடையாரவர்களுக்காக மகா ள-ள சிங்காரவேலுடையார் அவர்களால் நடத்தப்பட்டது ரொம் பவும் திருப்திகரமான விஷயமே.

***

நமதுபத்திரிகையை ஆதரிப்பதாகவாக்களித்தஓர் தக்கஜமீவெ ஜியுள்ள மிருசுதார் தன்னுடைய வாக்கைப் பூர்த்தி செய்ய எண் ணமிருப்பதாக அநுஷ்டானத்தால் காட்டவில்லை. ஜெப்பத்திற்கா சைப்பட்டுக் கொண்டு கையெழுத்துமாத்திரம் போட்டுவிட்டால் நமது பத்திரிகை நடந்துவிடுமா? இக்காலத்து அநேகம் பெரிய மிராசுதார்கள் தர்மத்தைக் குறைப்பதும் அதர்மத்தை விருத் திசெய்வதும் அவ்வித ம்செய்வதே தருமமென்று எண்ணு வதும், மிருகம்போல் காமவசத்திலிடுபெட்டு வம்சஷபணத்தைச் செலவழித்து வருகிறார்கள். அவர்களிடங் கிட்டிய பணமானது தகாத பாத்திரத்தினிடத்தில் கிட்டியதனமேயாகும் விபரம் பிந்தித்தெரிவிப்போம்.

***

நமது பத்திரிகை குறிப்பிட்டகாலங்களில் வெளிப்படுத்தும் பொருட்டு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முத்தி ராசாலையை ஸ்தாபிக்க தக்கபடி முயற்சிகள் செய்யப்பட்டு வரு வதால் கனவான்கள் வேண்டிய ஒத்தாசைகளை செய்துவரும்ப டிக்குக் கோறப் படுகிறார்கள். அதுவரையில் பத்திரிகைகள் கொஞ்சம் தாமதப்பட்டு வந்தாலும் இரண்டு சஞ்சிகைகள் சேர்ந்து அனுப்பப்பட்டாலும் பெற்றுக்கொண்டு பத்திரிகைகளை ஆதரிக்கக் கோருகிறோம். அவரவர்களும் தங்கள் சந்தாத்தொகை யை விரைவில் அனுப்பிவிக்சக்கோருகிறோம்.

(Honorary Patrons) மகா-ா-ா T. N. ராமச்சந்திர அய்ய ரவர்கள், டிரஷரி டிப்டி கலெக்டர், தஞ்சாவூர். (2) U. S. ராம ஸாமி அய்யரவர்கள், எக்ஸிகியூடிவ் இஞ்சினீர், செங்கற்பட்டு. (4) C. N சுப்பிரமணிய அய்யரவர்கள், (பென்ஷன்) அஸிஸ் டெண்டு இனிஸ்பெக்டர், (of Schools,) மதுரை. (4) P. நாரா யண அய்யரவர்கள், B.A., B.L., ஹைகோர்ட்டுவக்கீல், மதுரை. (5) B. S நடராஜ சாஸ்திரியாரவர்கள், B.A., B.L., ஹைகோர்ட் வக்கீல், நாகப்பட்டணம்.

(ஆதரணைக் கர்த்தாக்கள்.) — V. ராமச்சந்திர நாயுடு அவர்கள், ஏனங்குடி. (2) S. சீனிவாஸநாயுடு அவர்கள், ஏனங் குடி. (3) T. S. சிங்காரவேலு உடையாரவர்கள், தண்ணீர்க் குன்னம். (4) ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிகபண்டார ஸன்னதி யவர்கள், திருவாடுதுறை ஆதீனம். (5) ஸாம்பசிவ அய்யர வர்கள், குன்னியூர். (6) அஜபாநடேசுவர பண்டார ஸன்னதி யார் அவர்கள். திருப்புகலூர். (7) வைத்தியநாதஸ்வாமி அய்யர வர்கள், ஓனகப்பேரையூர்.

சந்தாதாரருக்கோர்விண்ணப்பம்.

சென்ற 15 மாதகாலமாய் அநேகர்கள் பத்திரிகைகளைப் பெற்றுக்கொண்டு வி. பி. அனுப்பப்பட்டவுடன் மௌனம் ஸாதித்து விட்டார்கள். அதனால் வெகு நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. இனி அவ்விதம் ஏற்படாமல் யிருக்கவேண்டிய தன் பொருட்டு ஸகல சந்தாதாரர்களுக்கும் பிப்பிரவரி மார்ச்சு மாதத் து இஷ்யூவை வி. பி. யில் அனுப்புவதாய் உத்தேசித்திருக்கிறது. அதைப்பெற்றுக்கொண்டு பத்திரிகையை ஆதரிக்கக்கோறுகிறோ ம். அலலது பணத்தைசீக்கிரத்தில் அனுப்ப உதவிசெய்யக்கோறு கிறோம்.

ஏஜண்டுகள் தேவை

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும் பணம் வசூலிக்கவும் ஏஜண்டுகள் தேவை ! தக்க கமிஷன் கொடுக்கப்ப டும். தஞ்சாவூர், திருச்சிநாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை முதலிய விடங்களில் ஏஜண்டுகளாயிருக்க விரும்புவோர்கள் விபரங்களுக்கு உடனே நேரில் எழுதித் தெரிந்துகொள்ள்லாம். (ப-ர்.)

The "Brahmavadin."

A high class Mouthly, devoted to Religion and Philosophy, conducted in English by able Editors, started under the advice and patronage of Swami Vivekananda. It deals with the spirit of Hinduism in all its aspects. It takes a sympathetic view of all the religions of the world. It views and harmonises everything in the light of the Vedanta, advocates oneness in the seemingly conflicting many.

Highly spoken of by eminent Scholars both East & West.

RATES OF SUBSCRIPTIONS.

Annual Subscription *including postage*		
	India ...	... 4 Rs.
	United Kingdom	... 8 Sh.
	United States	... 2 Dol

Single No. 6 as or 6 *d*

Specimen copy free for half anna stamp.

The Brahmavadin Series.

WORKS BY

Swami Vivekananda.

	Rs. a. p.
Jnana Yoga (in the press)	2 8 0
Karma Yoga ...	1 0 0
Raja Yoga	1 8 0
Bhakti Yoga (in the press	1 0 0
From Colombo to Almora	2 8 0
Ideal of Universal Religion	0 2 6
Real and Apparent Man	0 2 6
Reply to the Madras Address	0 1 6
Atman (self) ..	0 2 0
Vedanta Philosophy.	0 6 0

Others.

	Rs a.p.
Prophet of Dakshinaswar	0 8 0
Sayings of Sri Ramakrishna Paramahamsa	1 0 0
Pastoral Sri Krishna	0 4 0
Sri Krishna the King-maker	0 4 0
Lectures, Literary and Religious	0 8 0
Vedanta: Its Theory and practice ...	0 1 0
Duessen's Vedanta Philosophy ...	0 2 0
Theism by Justice Ranade	0 6 0
Indian Loyalty by Prof. M. Rangacharya	0 4

Full catalogue for half anna Stamp.

THE "BRAHMAVADIN" OFFICE,
Georgetown, MADRAS.

பிர்ம்மஞ்ஞானப்பத்திரிகை.

1. 1906-ஹு ஜூலைமீ முதல் திருவாரூரில் பிரசுரிக்கப்பட்டு வ
கிறது இதில் ஹிந்துமததத்துவங்கள், பகவத்கீதைக்கு நூதனதமிழ் மொ
பெயர்ப்புகள். மஹான்களின் சரித்திரங்கள், அத்வைதம், துவைதம்
விசிஷ்டாத்வைதம், திபாஸபி, விவேகாநந்தரின் உபந்நியாசங்கள், மு
லிய விஷயங்கள் அடங்கியிருக்கும் தவிர ,மடங்கள், ஆலயங்கள், தரு
சத்திரங்கள் பரிபாலனம் செய்யப் பட்டு வரும் நேர்மை. சீர்குலைவு மு
லியவைகளைப் பற்றிய ஸமாச்சாரக் குறிப்புகளும் பின்னும் மதசம்பந்தமா
சமாச்சாரங்களும் அடங்கியிருக்கும்.

2. சாமான்ய ஏழைகள்கூட சுலபமாய் வாங்கி வாசித்துப் பயனெய்
மாறு இந்தியாவிற்கு வெகு சொற்பமாகிய வருடச் சந்தா ரூ 1—8-
சிங்கப்பூர், மோல்மீன், பினங்கு முதலிய விடங்களுக்கு ரூ 2—8 ம
ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ஹெட்மாஸ்டர் மூலமாய் விண்ணப்பம் செ
துக்கொள்ளும் மாணாக்கர்களுக்கு மாத்திரம் ரூ 1 க்குக் கொடுக்கப்படு
சந்தா அட்வான்ஸாகவே செலுத்தப்படவேண்டும். அப்படி செலுத்
பவர்களுக்கு வருடத்திற்கு ஒரு படம் இனாமாயளிக்கப்படும். வருட
கடைசியில் செலுத்தப் பிரியமுள்ளவர்களுக்கு வருட சந்தா ரூ 2 வீத
சார்ஜ் செய்யப்படும். சந்தாதாரர்களாயிருக்க விரும்புவோர்கள் வருஷத்
துவக்கமாகிய ஜூலையிலிருந்தாவது அல்லது ஜனவரியிலிருந்தாவது பத்தி
ரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். வேறுவிதமாய்ப் பத்திரிகை அனுப்ப
படமாட்டாது. தனிக்காப்பி கிரயம் அணா 4.

உபந்நியாசங்கள் முதலியவைகள் தெளிவாயும் நேர்த்தியாயும் பிரதி மீ
20உக்குள் கிடைத்தாலன்றி அடுத்த மீத்தில் பிரசுரஞ் செய்யப்படமாட
டாது. நெருக்கமாயுந் தெளிவாயுமிராத உபந்நியாசங்கள் பிரசுரஞ் செய்ய
படமாட்டாது. வாபீசு செய்யப்படவுமாட்டாது. இதில் கையெழுத்துப்பே
டப்பட்டிருக்கும் உபந்நியாசம் முதலியவைகளுக்குப் பத்திராதிபர் ஜவா
தாரியல்ல. பத்திரிகை கிடைக்காதவர்கள் ஒரு மாதத்திற்குள் தெரிவி
துக் கொண்டாலொழிய பத்திரிகை மறுபடியுமனுப்பப்படமாட்டாது அ
சியம் வேண்டியதாயிருந்து கைவசமுமிருந்தால் காப்பி 4 அணா வீதம் பெற்
றுக்கொண்டு கொடுக்கப்படும். பதில் வேண்டியவர்கள் ரிப்ளை கார்டு அல்
லது லேபிள் அனுப்பினால் பதில் அனுப்பப்படும்.

Advertisements for moderate charges.

பிரசுரங்கள் மிதமான சார்ஜூக்குப் போடப்படும்

சந்தாதார்கள் தங்கள் சந்தாவை விரைவில் அனுப்பவே
ண்டும். அல்லது மௌனம் சாதிக்காமல் வி. பி. யைப்பெற்று
கொள்ளவேண்டும்.

**நல்ல ஏஜண்டுகள்! தாராளமான கமிஷன்கொடு
கப்படும்.** Apply to,

ஏ. இராமய்யர்,
எடிட்டர் & புரொப்ரைட்டர்,
பிரம்மஞ்ஞான பத்திரிகை, திருவாரூ